நல்லூர் ... லகம்
யாழ்ப்பாணம்

# லலித், காமினி மீது சி.ஐ.டி பொலிஸார் இரகசிய விசாரணை

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2023 மாசி 10 இதழ் 11
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 21 - 02 1993

(கொழும்பு)

முன்னைய ஐக்கியதேசியக் கட்சி அதிகாரிகளும், இன்றைய ஜனநாயக ஐக்கிய தேசியக்கட்சிதலைவர்ளுமான லலித் அத்துலத் முதலியும், காமினி திசநாயக்காவும்அமைச்சர்களாக இருக்கும்போது மோசடியில் ஈடுபட்டதாக சி. ஐ. டி. பொலிசார் விசாரித்துவருகின்றனர்.

அத்துலத்முதலி மீது வசதியில் போட்டிருக்கும் பணம் சம்பந்தமாகவும், காப்புறுதி (4-ம் பக்கம் பார்க்க)

## உள்ளூராட்சிசபை தேர்தல்; ஐ.தே.கவுக்கு வெற்றி அரிது?

(கொழும்பு)

இந்த வருடத்தில் இடம்பெறவுள்ள உள்ளூராட்சி சபைகளின் தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெறும் என்று கூறமுடியாது.

இவ்வாறு 'ராவய' பத்திரிகை ஆசிரியர் விக்டர் ஐவன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது: இலங்கையில் உள்ள சகல உள்ளூராட்சி சபைகளின் ஆயுட்காலம் இந்த வருடத்துடன் முடிவடைகிறது எனினும் ஜனாதிபதி தேர்தலா அல்லது உள்ளூராட்சி சபைத் தேர்தலா முதலில் நடக்கும் என்று சொல்ல முடியாதிருக்கின்றது (4-ம் பக்கம் பார்க்க)

## இந்தி திணிப்பை எதிர்த்து தமிழகத்தில் பேரணி

(சென்னை)

தமிழ்நாட்டில் 'இந்தி' மொழி திணிப்பதைக் கண்டித்து பாட்டாளி மக்கள் கட்சியினர் சென்னையில்நேற்று பெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை நடாத்தினர். (4ம் பக்கம் பார்க்க)

## ● அப்பாவிகளை சுட அதிகாரமில்லை

# கிளாலிப் படுகொலைகள் குறித்து நீதி விசாரணை நடத்த கோரிக்கை

### மனித உரிமை அமைப்பு நெருக்கடி

(கொழும்பு)

கிளாலிக் கடலில் சிறிய படகுகளில் பயணம் செய்யும் அப்பாவிப் பொதுமக்களை கடற்படையினர் சுட்டுக்கொல்வது குறித்து அரசு சார்பற்ற நீதியான புலன்விசாரணையை அரசு நடாத்தவேண்டுமென இலங்கையின் மிக முக்கிய மனித உரிமை அமைப்பான "சிவில் றயிற்ஸ் மூவ்மென்ற்" கோரியுள்ளது.

இதுகுறித்து அந்தஅமைப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் அரசையும் படையினரையும் காரசாரமாகவும் கண்டி [4-ம் பக்கம் பார்க்க]

### பம்பைமடுவில் தாக்குதல்

(கொழும்பு)

பம்பைமடு பகுதியில் இராணுவத்தினர் நிலைகள் மீது நேற்று முன்தினமிரவு விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தியதாக கூட்டுப்படைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இத்தாக்குதலின்போது படையினர் தரப்பில் சேதம் எதுவும் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. [ரி]

## கிளாலி பயங்கரம் மற்றும் இருவர் பலி

(யாழ்ப்பாணம்)

கிளாலிக் கடலில் கடந்த திங்கள் கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் பொன்னாலை மேற்கைச் சேர்ந்த வைத்திலிங்கம் அமிர்தலிங்கம் (வயது 32) உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தனது சகோதரியின் திருமணத்திற்காக நகைகளுடனும் பணத்துடனும் வந்துகொண்டிருந்தபோதே இவர் கடற்படையினரின் தாக்குதலில் பலியானதாகவும் இவரது சடலம் அலங்கேணிப்பகுதியில் கரையொதுங்கியுள்ளதாம்.

இதேவேளை அன்றைய தினம் இக்கடலில் வேலணையைச் (4-ம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்னை தீர்வுத் திட்டம் சர்வமதக் குழு சமர்ப்பிக்கும்

[கொழும்பு]

இலங்கை இனப் பிரச்னைத் தீர்வுக்குச் சர்வ மதங்களையும் சேர்ந்த குழுக்கள் திட்டம் ஒன்றை முன்வைக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அஸ்கிரிய மல்வத்த பீடாதிபதிகள் தீர்வுத் திட்டம் குறித்து ஆலோசித்து

## மட்டு. எல்லைக்கிராமங்கள் பல இராணுவத்தால் அழிப்பு!

- அம்பாறையில் 14,000 பேர் ...

றும் தெரிவிக்கப்பட்டது. [ரி]

னது சகோதரியின் திரும

இக்கட்டான வேலணையைச் [4-ம் பக்கம் பார்க்க]

# இனப்பிரச்சினை தீர்வுத் திட்டம் சர்வமதக் குழு சமர்ப்பிக்கும்

(கொழும்பு) இலங்கை இனப் பிரச்சினைத் தீர்வுக்குச் சர்வ மதங்களையும் சேர்ந்த குழுக்கள் திட்டம் ஒன்றை முன்வைக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அஸ்கிரிய மல்வத்த பீடாதிபதிகள் தீர்வுத் திட்டம் குறித்து ஆலோசித்து வருகிறார்களாம். மேலும் இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய மத அமைப்புகளும் இது பற்றி [4-ம் பக்கம் பார்க்க]

# பிரதமர், அமைச்சர்கள் சம்பளம் அதிகரிப்பு

(கொழும்பு) பிரதமர், அமைச்சர்கள், எம். பி.க்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படவுள்ளது.

இந்த சம்பள உயர்வு சம்பந்தமான பிரேரணை விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

பிரதமர், சபாநாயகர், அமைச்சர்கள், எம். பிக்கள் உட்பட அனைவரின் மாதாந்தப் படிகளும் ஜனவரி மாதம் முதல் அதிகரிக்கப்படும்.

இதற்கான அங்கீகாரத்தை அமைச்சரவை வழங்கவுள்ளது. (இ-கி)

# மட்டு. எல்லைக்கிராமங்கள் பல இராணுவத்தால் அழிப்பு!

## - அம்பாறையில் 14,000 பேர் இடம் பெயர்வு -

(யாழ்ப்பாணம்) மட்டக்களப்புப் பகுதியில் எல்லையோர தமிழ்க் கிராமங்கள் யாவும் சிறிலங்கா இராணுவத்தால் அழிக்கப்பட்டுள்ளன. அம்பாறையில் இராணுவ நடவடிக்கையால் 14,000 மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

இவ்வாறு மட்டு-அம்பாறை மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் கரிகாலன் [4-ம் பக்கம் பார்க்க]

# வடக்கு - கிழக்கு பகுதியில் 'றோ' செயற்பட்டு வருகிறதாம்

(கொழும்பு) வடக்கு-கிழக்கில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கையில் இந்திய புலனாய்வுத்துறையான 'றோ'வும் செயற்படுவதாக கொழும்பில் செய்திகள் வெளியிடப்பட்டுள்ளனவாம்.

அண்மைக்காலங்களில் குறிப்பாக யாழ். குடாவில் இடம்பெற்ற சில குண்டு வெடிப்பு சம்பவங்களிலும், அண்மையில் கோப்பாயில் இடம்பெற்ற கைக்குண்டு வீச்சிலும் 'றோ'வின் செயற்பாடு பின்னணியில் இருந்ததாகவும் கொழும்பில் பரவலாக செய்திகள் அடிபட்டுள்ளன.

இதுபற்றி கொழும்பு பத்திரிகையாளர்கள் இந்திய தூதுவர் திரு. என். என். ஜா விடம் கேட்டபோது இதுபற்றி தமக்கு எதுவும் தெரியாதெனவும் கூறியுள்ளார். (இ)

# 50 சைக்கிள்கள் காவல்துறை மீட்பு

(யாழ்ப்பாணம்) யாழ். மாவட்டத்தில் பல்வேறு இடங்களிலும் திருட்டுப் போன துவிச்சக்கர வண்டிகளில் ஐம்பதுக்கு மேற்பட்டவை தமிழீழ காவல் துறையினரால் மீட்டு எடுக்கப்பட் [4-ம் பக்கம் பார்க்க]

# இலங்கையில் நிலைமை மோசம் அமெரிக்கா பலத்த கண்டனம்

(வாஷிங்டன்) இலங்கையில் மனித உரிமை நிலைகள் மிகவும் மோசமடைந்து வருவதாக அமெரிக்க அரசு வன்மையாகக் கண்டனம் தெரிவித்துள்ளது. அமெரிக்க அதிபர் திரு. பில்கிளின்ரன் ஜனாதிபதியாக பதவியேற்று சில வாரங்களில் அமெரிக்க மனித உரிமைகள் அமைப்பு வெளியிட்ட 25 பக்கங்களைக் கொண்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கை மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை அரச படைகள் 4-ம் பக்கம் பார்க்க)

உளவாளிகள் !!!

அவதானமாக இருக்கவும் - - - !

சந்தியில் நாம் பேசும் சாதாரண விடயங்களே

உளவாளிகள் தேடும் பெரிய விடயங்கள்.

# 18,000 தமிழர்கள் காணாமல் போயினர்

(வாஷிங்டன்) இலங்கையின் வடக்கு-கிழக்கில் கடந்த பத்து வருடத்தில் மட்டும் 18,000 தமிழ் மக்கள் காணாமல் போயுள்ளதாக அமெரிக்க மனித உரிமைகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

காணாமல் போனவர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் கிழக்கு மாகாணத்திலேயே [4ம் பக்கம் பார்க்க]

## பூநகரி பாதை விவகாரம்

# புலிகள் நிலைபற்றி கருத்துக்கூற ஆயர் மறுப்பு

(கொழும்பு) பூநகரி பாதை தொடர்பாக விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு குறித்து கருத்துக் கூற அங்கிலிக்கன் ஆயர் கென்னத் பெர்னாண்டோ மறுத்துவிட்டார்.

இதன் பின்னணியில் உள்ள தாற்பரியங்கள் தெரியாததால் இதுகுறித்து எதையும் தான் கூறப் போவதில்லையென்று ஆயர் தெரிவித்தார்.

எப்போது யாழ்ப்பாணம் போகிறீர்கள் என ஆயரிடம் பத்திரிகையாளர்கள் கேட்டபோது இப்போதைக்கு இல்லை என பதிலளித்தார். (இ-கி)

# "5,200 புலிகள் இதுவரை வீரச்சாவு அடைந்துள்ளனர்"

## — இளம்பரிதி உரை

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்ட சரித்திரத்தில் இதுவரை 5200க்கும் மேற்பட்ட போராளிகள் வீரச்சாவடைந்துள்ளார்கள். மேலும் பலர் உன்னத நோக்கத்திற்காக தமது வாழ்வை துறந்து விடுதலைப்போராட்டத்தில் இணைந்துள்ளார்கள்.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் இளம்பரிதி மாவீரர் நினைவாக சுன்னாகத்தில் நடைபெற்ற அஞ்சலிக்கூட்டத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில், எமது விடுதலை இயக்கமானது ஏனைய இயக்கங்களுடன் ஒப்பிடும்போது பாரிய சிறப்பான வளர்ச்சியடைந்துள்ளது. நாம் எந்த ஒரு நாட்டிற்கோ வல்லரசுக்கோ அடிபணியவில்லை. அடிபணிந்து நடக்கப்போவதில்லை.

எமது போராளிகள் இராணுவத்தினருடன் போரிடும் போது மன உறுதியுடனும் கொள்கைப் பிடிப்புடனுமே போராடிவருகிறார்கள். இராணுவத்தினர் நிலைகளிலிருந்து முன்னேறும்போது எமது போராளிகள் அவர்கள் மீது உடனடியாகத் தாக்குதலைத் தொடுப்பதில்லை. இராணுவம் முன்னேறிவரும்போதே தாக்குதலை உறுதியுடன் தொடுக்கிறார்கள். இவ்வாறு தாக்குதல் மேற்கொள்ளுவதனுல் எதிரியை அழிப்பதுடன் எதிரியிடமிருந்து ஆயுதங்களையும் பறிக்கக்கூடியதாக உள்ளது.

போராட்டம் நடந்துகொண்டிருக்கின்ற வேளையில் இலங்கை அரசானது எம்மக்கள் மீது பொருளாதாரத்தடையை விதித்துள்ளது. இச்செயற்பாடானது மக்களை பட்டினிச்சாவின் விளிம்பிற்கு இட்டுச் செல்வதாய் அமைந்துள்ளது. பொருளாதாரத்தடையினுல் பலமரணங்கள் ஏற்படுவதுடன் தற்கொலைமுயற்சிகள் குடாநாட்டினுள் அதிகரித்து வருகிறது. இப்படியான பல சோக சம்பவங்களும் அண்மையில் குடாநாட்டினுள் நிகழ்ந்துள்ளன. எதிரியின் பொருளாதாரத் தடையை நீக்குவதற்கு நாம் புதிய மல உற்பத்தி மாற்றுத் திட்டங்களை அமைத்து, அதன்படி நின்று செயற்பட்டே வெற்றி பெறவேண்டும் என்றார்.

158-சி

## வருடாந்த கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி தெற்கு ஸ்ரீலஸ்ரீ சிவசங்கர பண்டிதர் நூல் நிலைய வருடாந்தக் கூட்டத்தில் புதிய தலைவராக க. தர்மலிங்கமும், செயலாளராக து முரளீதரனும், பொருளாளராக சி சிவக்குமாரும் தெரிவுசெய்யப்பெற்றனர்.

6 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது.

(*)

# ஒருலட்சம் பேருக்கு வெளிநாட்டில் வேலைவாய்ப்பு

(மானிப்பாய்)

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் இவ்வருடத்தில் ஒரு லட்சம் பேருக்கு மேற்பட்ட இளைஞர்களுக்கும், யுவதிகளுக்கும் வெளிநாட்டில் வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுக்க முன்வந்துள்ளது.

இதன் ஆரம்ப நடவடிக்கையாக முதலில் கட்டாருக்கு 25,000 பேர் அனுப்பப்படவுள்ளனர் இதற்கான நடவடிக்கையில் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தற்போது ஈடுபட்டுள்ளது. இதில் தொழில் நுட்பவியலாளர்கள், தாதிமார், ஆசிரியர்கள், தொழிலாளர்கள் போன்ற பல்துறையினருக்கே முதலில் வேலைவாய்ப்பு கிடைக்கவுள்ளது.

இவர்களுக்கு வெளிநாடுகளில் விசேட தொழில் பாதுகாப்புத் திட்டமும் நடைமுறைப்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. (71)

## கருத்தரங்கு

(பண்டத்தரிப்பு)

யாழ். உளநல சங்கத்தினால் மதுபான விலக்கல் பற்றிய கருத்தரங்கு மானிப்பாயில் இயங்கிவரும் செல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலையில் உளநல சிகிச்சைப் பிரிவில் ஒவ்வொரு சனிக்கிழமையிலும் முற்பகல் பத்து மணிக்கு நடைபெற்று வருகின்றது. (72)


## வரிவிளம்பரம்

### தேவை

அச்சக வேலை பழக்க ஆர்வமுள்ளவர் தேவை. மாநகரசபை எல்லையில் வசிப்பவர் விரும்பத்தக்கது. தேவி அச்சகம், 114/19, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி-7245

### நோவு வைத்தியம்

ஒட்டகப்புலம் சமதிதரி நோவு எண்ணெ கிடைக்குமிடம் எஸ். வி. மெடிக்கல்ஸ், 480, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் (சி-7219)

### விற்பனையாகின்றது

விக்டர் வேலாயுதத்தின்: கணித்தாக்கு, தனித்தனி ஒவ்வொருவருடைய ராசிக்கும் ராசிப்பலன், (இந்திய சஞ்சிகை), சிங்களம் எழுதப்பேச: தமிழோடு சிங்களம், FOR BEGINNERS: CLASS WORK. கிடைக்குமிடம்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

எ-2904

### நேர்க்கோட்டில் செவ்வாய் யுரேனஸ் நெப்டியூன், புளுட்டோ

14-4-93 வரை சஞ்சரிப்பது நன்மையல்ல. பொருளாதார, போக்குவரத்துத் தடைகள், உணவு நெருக்கடிகள், யுத்த பீதிகள், வெப்பம் அதிகரிக்கும் இராசிபலன்கள், பாடசாலைப் புத்தகங்கள், வியாழ வக்கிர பலன்களுக்கும் பாலாஜி புத்தகசாலை, பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.

சி-7249

### அக்குபங்சர் சிகிச்சை

கொழும்பில் அரச வைத்தியசாலையில் (களுபோவில) கடமையாற்றும் அக்குபங்சரில் நிபுணத்துவம் பெற்ற டாக்டரினுல் மூட்டுவாதம், ஆஸ்மா, நாரிப்பிடிப்பு, பாலியல் பிரச்னைகள், மற்றும் நரம்பு தொடர்பான தீராத நாட்பட்ட நோய்களுக்கும் வெற்றிகரமாக சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது. மல்றி மெடிக்கல் கிளினிக், இல. 121/1, 1/1 மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

சி-7251

### தேவை

University of Jaffna Sri Lanka

M. Sc. IN BIOTECHNOLOGY

"Graduates in chemical, biological, medical, dental, verterinary, agricultural and engineering sciences will be considered Forward application with biodata All applicants will be required to sit for a qualifing examination and a viva. Address correspondence to Registrar, University of Jaffna.

Closing date 15th of March 1993.

REGISTRAR

## பல்லாண்டு காலம் வாழ்க

வர்த்தக ஊழியர் சங்கத்தின் வளர்ச்சிகண்டு மகிழ்ச்சியடைகின்றோம். ஊழியர்களின் நலனில் அக்கறை கொண்டு கடினமாக உழைத்துவரும் சங்கம் வாழ வளர வாழ்த்துகின்றோம்.

**அன்னராஜா ஸ்ரோர்ஸ்**

பலசரக்கு மாளிகை

158, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(ஏ-2903)

## 2 ம் ஆண்டு நினைவஞ்சலி



அகில இலங்கை

## இளங்கலைஞர் மன்றத்தின் 13வது இசைவிழா

-0-0-0-0-0-0-0-0-0-0-0-0-0-0-0-0-0-0-0-0-0-

இடம்: மன்ற கலாமண்டபம்

சட்டநாதர் வீதி, நல்லூர்

13-ம் நாள் 21-2-93 ஞாயிறு

புங்குடுதீவு, நயினாதீவு

ப. நோ. கூ. சங்கத்தின் ஆதரவில்

மாலை 4-00 — 5-00 மங்கள இசை

| நாதஸ்வரம்: | தவில்: |
|---|---|
| என். கே. கணேசன் | என். கே. வீராசாமி |
| ஆர். ஷண்முகம் | கே. ஆர். வீராசாமி |
| கே. சிவதாஸன் | என். கணேசமூர்த்தி |
| என். சண்முகம் | கே. ஷண்முகநாதன் |

5-00 — 5-20 வீணை

ரி. பிரேமினு. ரி. புவிதாலட்சுமி, ஆர் .சுதர்சனு எஸ். ஜெயமனேகரி, எம் காதம்பரி, ப. அம்பிகை மிருதங்கம்: ரி திருக்குமரன்.

5-20 — 5-40 பாட்டு

எஸ். கவிதா, எஸ். லொயிஸ்சனுஷியா, ரி. பாமினி, ஜே. ரஞ்சிதா. வை. ஜெயபாரதி, ஆர். அஷ்டலக்ஷ்மி.

| வயலின் | மிருதங்கம் |
|---|---|
| கிருஷ்ணவேணி மயில்வாகனம் | பி ரதிருபன் |

5 40 — 6-00 இருவயலினிசை

வித்யாசங்கரி, திருமாறன்.

மிருதங்கம்: சதா வேல்மாறன்.

6 00 — 6 45 பாட்டு ஹம்ஸானந்தி ஸேதுபதி

| வயலின்: | மிருதங்கம்: |
|---|---|
| சாந்தநாயகி சுப்ரமணியம் | எம். சிதம்பரநாதன் |

6-45 — 7-00 மங்கள விளக்கேற்றல்

பாலர் வகுப்பிலிருந்து (A/L) வரை தங்களால் இயன்ற பாடங்களைக் கற்பிக்கக் கூடிய ஆசிரியர்கள் தேவை. காலை 9—10 அல்லது மாலை 2—3ற்குள் சந்திக்கவும். ஆறுமுகநாதன். 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, கண்டுக்குளி.

சி-7253

## O. L (MATHS)

(O. L) கட்டாய பாடமாகிய கணித பாடத்தினை 26 வருட அநுபவமுடைய ஆசிரியரினால் ஆரம்ப அறிவிலிருந்து விசேட சித்திக்கு 40 மணித்தியாலங்களில் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, கண்டுக்குளி.

(சி-7252

## பாடசாலையில்

## கொட்டகை

புலோலி)

அம்பசிட்டி மெதடிஸ்த மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையில் ஏற்பட்டுள்ள இட நெருக்கடி காரணமாக தற்காலிக கொட்டகை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இத்தற்காலிக கொட்டகையில் சில வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. (61)

REGISTRAR
UNIVERSITY
OF JAFFNA.
1993-02-18.

A-2899

## University of Jaffna Sri Lanka

### POSTGRADUATE DIPLOMA IN PUBLIC ADMINISTRATION

Further to the advertisement on the above course, the relevant application forms and prospectus can be obtained from the Senior Asst. Registrar / Academic Branch after a payment of Rs. 25/- at the Finance Branch.

Those who have already obtained the application forms should return the old forms and collect the new ones with the prospectus after a payment of Rs 15/-

REGISTRAR.
UNIVERSITY
OF JAFFNA.
1993-02-18.

A-2898



## திருமதி புவனேஸ்வரி அரியராசா

பிறப்பு: 30-09-1941 இறப்பு: 14-02-1991

திதி: 21-02-1993

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்:

குடும்பத்தினர்

''ஜெயந்தம்'',
தாவடி தெற்கு,
கொக்குவில்.

(சி-7250)

6-45 — 7-00 மங்கள விளக்கேற்றல்

டாக்டர் கே. பாலசுப்ரமணியம்
திரு. காசிலிங்கம் (காளோ)
திரு. தா. பராஜசிங்கம் (அம்பாள் காபேவர், நீர்வேலி)
திரு. வே. வடிவேல் (வர்த்தகர்)
திரு. கா. பரமானந்தராஜா (வர்த்தகர்)

தலைவர்: பி. கனகலிங்கம்
(தலைவர், ப. நோ. கூ. சங்கம், புங்குடுதீவு)

சிறப்பு விருந்தினர்: பேராசிரியர் சிவஞானசுந்தரம்
(யாழ். பல்கலைக் கழகம்) (நந்தி)

7-00 8-00 இசைக்கச்சேரி

பாட்டு: எஸ். கணபதிப்பிள்ளை
வயலின்: ஆர். ராதாகிருஷ்ணன்
மிருதங்கம்: எஸ் துரைராஜா

8·00 — 9-15 ''நாட்டிய கலாகேந்திரா''
மாணவிகள் வழங்கும் பரதநாட்டியம்

நட்டுவாங்கம், கிரிஷாந்தி ரவீந்திரா, கிருஷ்ணருபிணி சேனாதிராசா
பாட்டு: ஞானகுமாரி சிவனேசன், வரிண ராமேஸ்வரன்
மிருதங்கம்: எஸ். மகேந்திரன்
வயலின்: பாக்கியலட்சுமி நடராஜா

9-15 — 10-15 ஆட்டநாட்டுக்கூத்து
செல்லையா மெற்றுஸ்மயில் நெறியாள்கையில் வழங்கும்
''கண்ணகி வழக்குரை''

வாழ்த்துகிறோம்

## நியூ லிங்கம் ஸ்ரோர்ஸ்

திருநெல்வேலி மார்கட்

(எ 2861)

யாழ்ப்பாணம்



# சிங்கள - பௌத்த இனவாதத்தை எதிர்த்ததுடன்
# ஆயுதப் போராட்டத்தை 'அமரர் சண்' ஆதரித்தார்

திரு. சண்முகதாசன் மறைந்த செய்தி எம்மத்தியில் இருந்து ஒரு நேர்மையான தொழிற்சங்கவாதியும் தெளிவான அரசியல் நோக்கும் உடைய ஒருவர் இல்லாமல் போனதை எடுத்துக் காட்டுகிறது.

நான் தொழில் திணைக்களத்தில் கடமை புரிந்த காலத்தில், அவரது தொழிற்சங்க நடவடிக்கைகளின் நேர்மையான அதே நேரத்தில் விட்டுக் கொடுக்காத, எடுத்த கொள்கையை வென்றெடுக்கும் ஆற்றலும் அவருக்கு இருந்ததை அறிவேன்.

யாழ்ப்பாண மாநகரசபை ஊழியர்கள் சம்பந்தமான அவரது தொழிற்சங்கத்தின் நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டால் அவர் அத் தொழிலாளருக்கு ஈட்டிக் கொடுத்த வெற்றிகளை அறிந்து கொள்ளலாம்.

இன்று யாழ் மாநகரசபை ஊழியர்கள் யாவரும் உள்ளூராட்சி ஆணைக்குழுவில் வேலை செய்யும் அரசாங்க ஊழியர். மார் பதினைந்து வருடங்களுக்கு முன்னர் இவ்வூழியர்களில் அநேகர் நேரடியாக மாநகரசபையின் கீழ்த்தான் வேலை செய்துவந்தனர். அவர்களின் பிரச்சினைகளில் தலையிடுவதற்கு தொழில் திணைக்களத்துக்கு அதிகாரம் இருந்தது. அக்காலகட்டத்தில் தொழில் புரிந்த அநேகம் தொழிலாளர்கள் நீண்ட காலமாக (பத்துவருட சேவைக்காலங்களின் பின்பு கூட) நிரந்தரமாக்கப்படாமலும், மாதச்சம்பளம் பெறுதவர்களாகவும், விடுமுறைச்சலுகைகள் முறையாக கிடைக்கப்பெறுதவர்களாகவும் இருந்தார்கள்.

மாறிமாறிவந்த நகரபிதாக்களுக்கும் அதிகாரிகளுக்கும் நியவில சீர்கேடுகளை நிவர்த்தி செய்ய ஒருவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

முன்னாள் நகரபிதா ஒருவர் தொழிலாளர்களின் நாட் சம்பளத்தைக் குறைத்தது மட்டுமல்லாமல் சனிக்கிழமைகளில் வேலை இல்லை என்றும் கட்டளை இட்டார். தொழிலாளர்களின் சம்பளம் குறைந்தது. அத்துடன் மாதத்தில் 4 நாட்கள் வேலையையும் இழந்தனர். நாட் சம்பளத்தில் வேலை செய்பவர்களின்பாடு எவ்விதம் இருந்திருக்கும் என்று நினைத்துப் பார்க்கவே முடியாது.

**அ. புவனேசன்**

இந்நிலையில் தான் அமரர் சண்முகதாசனின் இலங்கைப் பொதுக்கைத் தொழிலாளர் சங்கம் இரு வேலை நிறுத்தங்களை நடாத்தி தொழிலாளர்களின் சகல குறைபாடுகளையும் வென்றெடுத்தது. இதை யாழ் மாநகரசபைத் தொழிலாளர்கள் இன்றும் மறக்கமாட்டார்கள்.

எமது இனப்பிரச்சினையில் கூட அமரர் சண்முகதாசன் ஆயுதப்போராட்டத்தை வரவேற்றதுமட்டுமல்லாமல் சிங்கள பௌத்த பெரும்பான்மை சிந்தனைகளெதிரான பிரசாரங்களைச் செய்தார்.

அமரர் சண்முகதாசன் எங்கு பிழையிருக்கிறது என்று தமது மனச்சாட்சிக்குப்படுகிறதோ அவ்வேளைகளில் தமது சரியான கருத்தை முன்வைக்கவும் அதை நிலைநாட்டுவதற்கான நடவடிக்கையில் இறங்குவதற்கும் ஒருபோதும் பின்னின்றதில்லை. சீனாவின் தலைவர் மா ஓ சேதுங் இறந்த பின்னர் அங்கு ஏற்பட்ட அரசியல் மாற்றங்களையும் குளறுபடிகளையும் சண்முகதாசன் ஏற்றுக்கொள்ளவில்லை. எதிர்த்தார்.

அதுமட்டுமல்லாமல் அக்காலகட்டத்தில் மா ஓ சிந்தனையை ஏற்றிருந்த அல்பேனியக் கம்யூனிஸ்ட் கட்சியுடன் சேர்ந்து சீனாவின் புதிய அரசியல் மாற்றங்களை விமர்சித்தார். அத்துடன் அவர் நின்றுவிடவில்லை. அல்பேனிய கம்யூனிஸ்ட் கட்சி காலப்போக்கில் கருத்துப் பிழைகளை விட்டு மா ஓ சேதுங் சிந்தனைகளுக்கு எதிராக நிலையெடுத்த போதும் சண்முகதாசன் அக்கட்சியின் போக்கைக்கண்டித்து சர்வதேச ரீதியில் அமைந்த புதிய பொதுவுடமை அகிலத்தை உருவாக்குவதிலும் முன்னோடியாகவும் விளங்கினார்.

ஆகவே ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது அமரர் சண்முகதாசன் தேசிய ரீதியாகவும் சர்வதேச் ரீதியாகவும் பின்னர் தமிழ் மக்களின் இனப்பிரச்சினை ஆயுதப்போராட்டத்தை அடைந்த வேளையிலும் சரியான பாதையில் நின்றது மட்டுமல்லாமல் தமக்குச் சரியெனப்பட்ட கோட்பாடுகளை பிரச்சாரம் செய்வதற்கும் பின் நிற்கவில்லை.

## ஒரு லட்சம் பனங்கிழங்கு
## வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி

(கொழும்பு)

வெளிநாடுகளுக்கு மாதம் தோறும் ஒரு லட்சம் பனங்கிழங்குகள் விமானத்தில் ஏற்றுமதியாகின்றன.

பிரான்ஸ், கனடா, ஜெர்மனி, ஆஸ்திரேலியா முதலிய நாடுகளுக்கு மாத்திரம் கடந்த மாதம் ஒரு லட்சத்துக்கும் அதிகமான பனங் கிழங்குகள் விமானம் மூலம் ஏற்றுமதியாகின.

புளுக்கொடியல், ஒடியல் மா, பனங்காய்ப் பலகாரம் முதலான பனம் பொருட்களுக்கு இந்த நாடுகளிலிருந்து வரும் கிராக்கி அதிகரித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

## மாகாணசபை தேர்தலில்
## ஐ. தே. க. வெல்லுமாம்

(கொழும்பு)

விரைவில் நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தலில் ஐ. தே கட்சியே மீண்டும் வெற்றி பெறும் என ஜனாதிபதி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: பொதுமக்களின் அபிப்பிராயங்களை அறிந்துகொள்வதில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா நீண்ட காலம் காத்திருக்கத் தேவையில்லையென்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-சி)

## உலக உணவுஸ்தாபனத்தின்
## 2வது கட்ட உதவி ஆரம்பம்

(கொழும்பு)

உலக உணவுஸ்தாபனம் வடக்கு கிழக்கு அகதிகளுக்கு உதவும் அதன் திட்டத்தில் இரண்டாவது கட்டத்தை ஆரம்பித்துள்ளது.

இந்ததிட்டத்தின்கீழ்மேலும் 40 அகதிக் குடும்பங்கள் ஆகஸ்ட் மாதம்வரை எழுபது லட்சம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருட்களை பெற்றுக்கொள்ளவுள்ளன.

இரண்டாவது திட்டத்தின் கீழ் வவுனியா வெற்றிக்குளத்திலுள்ள நலன்புரி நிலையத்தில் வாழும் 40 குடும்பங்கள் நன்மையடைகின்றன. (நி)

## உயிராம் கலைகள்
## உயர்ந்திடச் செய்வீர்

துன்பமும் இருளும் சூழ்ந்த நம் வாழ்வின்
துயர் களைந்திடும் மருந்தென ஆகி
இன்பம் அளித்திடும் இறைவனின் கலையாய்
இலங்கிடும் தமிழின் கலைகள் வாழி!

அடக்கியே எம்மை ஆள நினைக்கும்
ஆதிக்க வேர்கள் சிதைத்திட இங்கே
தளைத்திட வேண்டும் தமிழ்க்கலை யாவும்
தமிழின் தனித்துவம் நிமிர்ந்திடப் போகும்

தொன்மை நிறைந்த தமிழின் கலைகள்
தொய்ந்திடில் வீழும் தமிழினம் அந்த
உண்மை உணர்வீர் மண்ணிதைக் காக்கும்
உயிராம் கலைகளை உயர்ந்திடச் செய்வீர்.

இளமை இனிமை நிறைதமிழ் வாழ
இளங்கலைஞர் மன்றம் துலங்கிடச் செய்வீர்
எழிலுறு ஈழம் மலர்ந்திட என்றும்
எங்கள் கலைகள் வளர்ந்திடச் செய்வீர்

—நெடுந்தீவு லக்ஸ்மன்

## இன்று

(யாழ்ப்பாணம்)

கலைஞானி அறக்கட்டளை அங்குரார்ப்பண விழா இன்று 21ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி வளவில் அமைந்த யூனியன் கல்லூரி மண்டபத்தில் நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமஹாசந்நிதானம் தலைமையில் நடைபெறும்.

0 0 0

(உடுவில்)

நல்லூர் சமாசப் பாலர் பாடசாலை ஆசிரியர் சங்கத்தால் நடத்தப்பட்டு வரும் மாதாந்தச் சந்திப்புக்கூட்டம், இன்று 21ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை கொக்குவில் இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். (109)

0 0 0

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை கொத்தணிப்பாடசாலைகளுக்கிடையேயான உடற்பயிற்சிப் போட்டி இன்று 21ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8-30 மணிக்கு அராலி இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில், வட்டுக்கோட்டை கொத்தணி உப அதிபர் நா. தங்கரத்தினம் தலைமையில் நடைபெறும். (139)

0 0 0

(கொழும்புத்துறை)

அனைத்துலக மகளிர் தினத்தை முன்னிட்டு, தமிழீழ விடுதலைப் புலிகளின் விசேட கருத்தரங்கு இன்று 21ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6-00 மணிக்கு அராலி வடக்கு பாரதி சனசமூக நிலையத்தில் நடைபெறும். (154)

0 0 0

(யாழ்ப்பாணம்)

சதாவதானி கலாமன்றத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம், இன்று 21ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6-00 மணிக்கு, புலோலி மத்தி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலைய மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. (154)

0 0 0

(கொழும்புத்துறை)

சரசாலை இந்து இளைஞர் மன்றம் நடத்தும் பேச்சுப் போட்டி, 4 பிரிவுகளாக நடைபெறவுள்ளது. யாழ். வேம்படி மகளிர்கல்லூரிமாணவிகளுக்கு மேற்படி கல்லூரியில் இன்று 21ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு நடைபெறும். (154)

0 0 0

(கொழும்புத்துறை)

யாழ் மாநகரசபை சனசமூக நிலையங்களின் சமாசத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும், கலை, கலாசாரப் போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கான பரிசளிப்பு விழாவும் இன்று 21ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10-00 மணிக்கு யாழ். நாவலர் வீதியில் உள்ள நாவலர் கலாசார மண்டபத்தில், சமாசத் தலைவர் திரு. டானியல் அன்ரனி தலைமையில் நடைபெறும். (154)

## குடும்ப கஷ்டம்
## சிறுவன் தற்கொலை

(புலோலி)

குடும்பக் கஷ்டத்தினால் மனமுடைந்த 15 வயதுச் சிறுவன் ஒருவர் நச்சுத்திராவகம் அருந்தி மரணமானார்.

உடுப்பிட்டி 15-ம் கட்டையடியைச் சேர்ந்த சின்னையா நந்தகுமார் என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

உடுப்பிட்டி மரணவிசாரணை அதிகாரி திரு. வீ. நடராசா விசாரணை நடத்தினார்.

விசாரணையின்போது இறந்தவரின் தாயார் சாட்சியமளிக்கையில்: இராணுவ நடவடிக்கையின் போது தனது கணவரை செல்வச்சந்நிதியில் இராணுவம் சுட்டுக் கொன்றுவிட்டதாகவும் இறந்தவர் சைக்கிள் கடை ஒன்றில் வேலை செய்து வந்ததாகவும் குடும்பக் கஷ்டம் இவரை வாட்டி வந்ததென்றும் இதனால்தான் இவர் நச்சுத்திராவகம் அருந்தினாரென்றும் கூறினார்.

விசாரணை முடிவில் தற்கொலை எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது. (61)

## இராசி பலன்

**21-02-1993**

**ஞாயிற்றுக்கிழமை**

**(தமிழுக்கு மாசி 10)**

அமாவாசை மாலை 7-02 வரை, அவிட்டம் பிற்பகல் 1 59 வரை, மரணயோகம். இராகுகாலம் மாலை 5-01 முதல் 6-31 வரை. சுபநேரம் காலை 9-31 முதல்11 01 வரை. அமாவாசை விரதம்.

மேடம்: தொழில் இழப்பு. முதியவர் வெகுமதி, காரியச் சித்தி.

இடபம்: நினைத்ததைச் சாதித்தல், மன மகிழ்ச்சி, புதிய திருப்பம்.

மிதுனம்: கண் வலி, அயலவர் பகை, ஆணவப்போக்கு.

கடகம்: சடுதியான மனக் குழப்பம், தடுமாற்றம், பண முடை.

சிங்கம்: பலவித சகாயம், சகோதர பாசம், உல்லாசம்.

கன்னி: காத்திருந்தவர் வருவார். தானதர்மம், மனைச் சிறப்பு:

துலாம்: உடல் ரோகம், குடும்பப் பகை, வேண்டாத தொல்லை.

விருச்சிகம்: கற்பனையான பயம், தொழில் நஷ்டம், கடன் பிணக்கு.

தனுசு: மறைமுக நட்பு, காரிய ஜெயம். புறங்கூறல்

மகரம்: கடும் மனஸ்தாபம், நெஞ்சக் குமுறல், காரியத் தடை

கும்பம்: கூடிப்பேசுதல், குடும்ப விவகாரம், மனந் தெளிவு

மீனம்: தொழில் நஸ்டம், விதண்டாவாதம், பயனற்ற செய்கை.

ஜோதிடர்

## 10 இலங்கையரை ஜப்பானில் காணவில்லை

(கொழும்பு)

ஜப்பான் நாட்டில் வேலை வாய்ப்பை பெற்றுக்கொள்வதற்காக சிங்கப்பூரிலிருந்து பயணம்செய்த 10 இலங்கையர்களை காணவில்லையாம்.

இவர்கள் தொடர்பாக எதுவித தகவலும் இல்லாதனால் இவர்களை தேடிக் கண்டுபிடிப்பதற்கு சர்வதேச பொலிஸ் பிரிவின் துணையோடு முயற்சிகள் மேற்கொண்டிருப்பதாக சர்வதேச பொலிஸ் பிரிவின் இலங்கை கிளை தெரிவித்துள்ளது. (கே ஜ)

## ப. நோ. கூ. சங்கங்களுக்கு பொருட்கள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விவசாய உற்பத்தியாளர் விற்பனை கூட்டுறவுசமாசம் 'குமண' கப்பல் மூலம் எடுத்துவரப்பட்ட பொருட்களை கடந்த 12ம் திகதி முதல் பலநோக்கு கூட்டுறவுச்சங்கங்களுக்கு விநியோகித்து வருகின்றது.

மாவு, சீனி, சர்க்கரை, தீப்பெட்டி, தேயிலை, லக்ஸ்பிறே, மல்லி, சவர்க்காரம் ஆகியனவே பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களுக்கு விநியோகிக்கப்பட்ட பொருட்களாகும். (158)

## ★ வடக்கு-கிழக்கு அரச ஊழியர்க்கு உடன் ஒய்வூதியம் கிடைக்க ஏற்பாடு

(கொழும்பு)

அரச ஊழியர்கள் ஓய்வு பெற்ற ஒரு மாதத்துக்குள் அவர்களுக்கான ஒய்வூதியத்தையும், விபத்தில் மரணித்தால் அவரது கைம்பெண்ணுக்கு ஒய்வூதியத்தையும் ஒரு மாதத்துக்குள் பிரதேச செயலகங்கள் மூலம் பெற்றுக் கொடுக்க ஒய்வூதியத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

ஒய்வூதியத் திணைக்களம் தனது நடவடிக்கைகளை 200 செயலகங்களுக்குப் பன்முகப்படுத்தியதை அடுத்து இதனை இலகுவாகச் செய்யக்கூடியதாக உள்ளதெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பிரதேச செயலகங்கள் திறக்கப்படாத வடக்கு-கிழக்கு பகுதிகளில் ஒய்வூதியம் வழங்கும் நடவடிக்கைகள் மாவட்ட மட்டத்தில் பன்முகப்படுத்தப்பட்டுள்ளன.

வடக்கு-கிழக்கில் எட்டு மாவட்டங்கள் உள்ளன. அங்குள்ள அரசஊழியர்களின் ஒய்வூதியம் தாமதமானோர் தம்முடன் தொடர்புகொள்ளும்படி ஒய்வூதிய திணைக்கள பணிப்பாளர் திரு. ஆர். டபிள்யூ. பியசேன கோரிக்கை விடுத்துள்ளார்.

ஒய்வூதிய தாமதம் பற்றிய முறைப்பாடுகள் கிடைத்தால் தேவையான இடங்களுக்கு தொடர்புகொண்டு அதை உடனடியாக பெற்றுத்தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் திரு. பியசேன மேலும் தெரிவித்தார். (இ-கி)

## பத்திரிகையாளர் ஜெயராஜ் கனடாவில் தாக்கப்பட்டார்

(கொழும்பு)

பத்திரிகையாளர் திரு. டி. பி. எஸ். ஜெயராஜ் கனடாவில் இனந்தெரியாத நபர்களினால் கடுமையாக தாக்கப்பட்டார்.

இவர் முன்னர் பிரபல ஆங்கில பத்திரிகைகளில் கடமையாற்றிவந்தார். கனடாவில் வெளிவரும் செந்தாமரை பத்திரிகையின் ஆசிரியராக இவர் தற்போது கடமையாற்றிவருகிறார்.

கடந்த வியாழக்கிழமை கனடாவிலுள்ள ரொறன்ரோ நகரில் 'பாலமபட' என்ற சிங்களப் படத்தை பார்த்துவிட்டு திரு ஜெயராஜ் திரும்பிக்கொண்டிருந்தபோது இனந்தெரியாத நபர்களினால் மிக மோசமாகத் தாக்கப்பட்டதாகவும் இவரது ஒரு கால் முறிந்துபோனதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-சி)

## ரஷ்ய விமானம் ஒன்று 72 பேருடன் கடத்தல்

(மாஸ்கோ)

66 பயணிகளுடனும் ஆறு சிப்பந்திகளுடனும் ரஷ்யவிமானம் ஒன்று கடத்திச்செல்லப்பட்டுள்ளது.

சைபீரியாவிலிருந்து சென். பீற்றர்ஸ் பகுதிக்கு சென்றுகொண்டிருந்த அந்த விமானத்தை இரண்டு கடத்தல்காரர்கள் கைவெடிகுண்டுகளுடன் பயமுறுத்தி வெளிசிங்கை நோக்கிப்போக வேண்டுமென கோருவதாக நேற்றிரவு செய்திகள் தெரிவித்தன.

## உணவுப் பொருட்களை துரிதமாக இறக்க பணிப்பு

(திருநெல்வேலி)

பருத்தித்துறை துறைமுகத்தில் தரித்து நிற்கும் குமாரிக் கப்பலிலிருந்து உடனடியாக பொருட்களை இறக்குமாறு கொழும்பிலிருந்து அத்தியாவசிய சேவைகள் நாயகம் அறிவித்துள்ளார்.

யாழ். செயலக திட்டமிடல் பணிப்பாளருக்கே நேற்று இவ்வாறு செய்தி அனுப்பப்பட்டிருந்தது. இவ் அறிவித்தலைத் தொடர்ந்து பொருட்களை இறக்கும் பணி துரிதமாக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். குடாநாட்டிற்கு மேலும் அத்தியாவசியப் பொருட்களை எடுத்துவரப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (157-கி)

## செயலகங்கள் முன் மறியல் போர்

(திருநெல்வேலி)

யாழ் குடாநாட்டில் அத்தியாவசியப் பொருட்களின் பெரும் தட்டுப்பாட்டு நிலையை உடனடியாக போக்கி உணவுப் பொருட்களை அனுப்புமாறு அரசை கோருவதற்காக பொதுமக்கள் உதவி அரச அதிபர் செயலகங்கள்முன் மறியல் போராட்டங்களை நடாத்தவுள்ளார்.

பல உதவி அரச அதிபர் பணிமனைகளின்முன் இவ்வாறு மக்கள் ஆயிரக்கணக்கில் கூடி எதிர்ப்பைக் காட்டினார்கள். இவ்வாரமும் தொடர்ந்து இம்மறியல் போர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (157-கி)

### மிதிவெடியில் காலிழப்பு

(யாழ்ப்பாணம்)

கோட்டைப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் வேளை விறகு பொறுக்கச் சென்ற பெண் ஒருவர் மிதிவெடியில் அகப்பட்டு வலது கால் பாதத்தை இழந்துள்ளார்.

அராலியில் இருந்து இடம் பெயர்ந்து யாழ்ப்பாணம் புகையிரதநிலைய அதிமுகாமில் வசித்து வரும் இளம் குடும்பப் பெண்ணான திருமதி யோகேஸ்வரி சுப்பிரமணியம் (25 வயது) என்பவரே மிதிவெடியில் சிக்கியவராவர். (56-சி)

### உள்ளூர் தபால் விநியோகம்

(திருநெல்வேலி)

கொழும்பிலிருந்து குமாரிக் கப்பல் மூலம் எடுத்துவரப்பட்ட உள்ளூர் தபால்கள் நேற்றுமுதல் விநியோகிக்கப்பட்டுவருகின்றன.

இதேவேளை வடபகுதிக்கானந் வெளிநாட்டுத் தபால்கள் கொழும்பில் தேங்கிக்கிடப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (157-கி)

### இலங்கையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு-கிழக்கில் கடந்த வருடங்களைபோல் 1992லும் மிக மிக மோசமான மனித உரிமை மீறல்களை நடாத்தியுள்ளது. இந்த மோசமான நிலை கிழக்கிலேயே அதிகளவில் இடம்பெற்றுள்ளது.

இந்த மனித உரிமை மீறலில் கொலை, ஆட்கடத்தல், கைதானோர் காணாமல் போனவை, பெண்கள்மீது பாலியல் வன்முறை உட்பட பல அடங்கும். இவற்றை அரச படைகள் கிழக்கு மாகாணத்திலேயே அதிகளவில் மேற்கொண்டுள்ளன.

மனித உரிமைகளை பாதுகாக்குமாறு சர்வதேச நாடுகளிலுள்ள பல மனித உரிமை அமைப்புகள் வலியுறுத்திய பல ஆலோசனைகள் வெளியிடப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கை பலத்த கண்டனம் தெரிவித்துள்ளது. (சி)

### கிளாலி பயங்கரம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்த க. விஜயகுமாரன் (குமார்-32 வயது) என்பவரும் உயிரிழந்துள்ளார். (சி)

### இனப்பிரச்னை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆலோசித்து வருகின்றனவாம்.

மேலும் இவ்வாறனதொரு திட்டம் தயாரிக்கப்படும் பட்சத்தில் விடுதலைப் புலிகளைச் சந்திப்பதற்காக சர்வமதக் குழுவினர் யாழ்ப்பாணம் வரவும் திட்டமிட்டுள்ளனராம்.

இத்திட்டம் குறித்து விரைவில் சர்வமதக் குழுவினர் கொழும்பில் கூடியுள்ளன. (சி)

### 18,000 தமிழர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இடம் பெற்றுள்ளது. 1990 முதல் 92 பிற்பகுதி வரை பல ஆயிரக்கணக்கானோர் காணாமல் போயுள்ளமை ஆதாரங்களுடன் நிரூபிக்கப்பட்டுள்ளது.

காணாமல் போனவர்களில் பெருமளவில் படையினரால் கைது செய்யப்பட்டதாகப் பொதுமக்கள் பல இடங்களிலும் சாட்சியமளித்துள்ளனர். கைதான பலர் சுட்டுக் கொல்லப்பட்டபின் உருத்தெரியாமல் எரிக்கப்பட்ட அல்லது அழிக்கப்பட்ட பல சம்பவங்களும் இடம்பெற்றுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (சி)

### அப்பாவிகளை சுட

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளது.

அறிக்கையின் ஒரு பகுதி வருமாறு: கிளாலி பாதையை தடைசெய்யப்பட்ட பாதையாக அரசு பிரகடனம்செய்துவிட்டதால் பொதுமக்களை சுட கடற்படைக்கு அதிகாரமில்லை. சட்டத்தை மீறுவோரை வாகியை கடப்போரை கைதுசெய்து தடுத்து வைக்க மட்டுமே அதிகாரம் இருக்கிறது.

அண்மையில் இங்கு இடம்பெற்ற தாக்குதல்களில் தோணிப் பயணிகள்மீது கடற்படை துப்பாக்கியால் சுட்டபின் அவர்கள்மீது பாய்ந்து கத்திகளால் தாக்கியுள்ளது. இத்தாக்குதலில் தப்பிய 'மதகுரு' ஒருவர் இதுபற்றி வாக்குமூலம் அளித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

### லலித்-காமினி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொமிஷன் சம்பந்தமாக காமினி திசநாயக்கா மீதும் விசாரணை நடைபெற்றுவருகிறதாம்.

காப்புறுதி கூட்டுத்தாபனம் மகாவலி அபிவிருத்தி அதிகார சபைத்தலைவரிடம் 6 மில்லியன் ரூபா கொமிஷன் கொடுத்த பணத்தில் ஒருபகுதி காமினி திசநாயக்காவுக்கு சென்றுள்ளது என்று சி. ஐ. டி. விசாரணையின்போது தெரிய வந்துள்ளதாக அறியவருகின்றது. (சு-சி)

### மட்டு எல்லை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

குறிப்பாக கல்லோயா குடியேற்றத் திட்டத்திலுள்ள 37-ம், 38-ம், 39-ம், 40-ம் கிராமங்களில் தமிழ் மக்களின் குடியிருப்புகள் சிறிலங்கா இராணுவத்தால் அழிக்கப்பட்டுள்ளன.

இதேபோலவே புல்லுமலைக் கிராமமும் முற்றாக அழிக்கப்பட்டுள்ளது. வெல்லாவெளி, பாலையடிவெட்டை. செங்கலியாமடு போன்ற இடங்களும் இராணுவ அழிப்புக்குள்ளாகியுள்ளன.

இப்பகுதிகளிலிருந்து அனைத்து வீடுகளும் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. அத்துடன் வீடுகளிலிருந்து பொருட்கள் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளன.

அம்பாறை மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கைகளினால் பல கிராமங்களிலிருந்து தமிழர்கள் விரட்டியடிக்கப்பட்டுள்ளனர்.

இராணுவ ஒத்துழைப்புடன் அங்குள்ள சிங்களவர்களும் முஸ்லிம்களும் தமிழர்களை விரட்டியுள்ளனர்.

இதனால் அப்பகுதிகளிலிருந்து 14,000 தமிழ் மக்கள் இடம்பெயர்ந்து வேறிடங்களில் தங்கியுள்ளனர். தற்போது அம்பாறை மாவட்டத்தில் திருக்கோயில், தம்பிலுவில் ஆகிய இரு கிராமங்களிலுமே தமிழர்கள் வாழ்ந்துவருகின்றனர். என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ரி)

### இந்தி திணிப்பை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சென்னையில் உள்ள பாட்டாளி மக்கள் கட்சித் தலைமை அலுவலகத்தில் இருந்து ஆரம்பமான ஊர்வலம் சென்னை தொலைக்காட்சி நிலையம் வரை சென்றது.

தொலைக்காட்சி நிலையத்துக்கு முன்பாக மத்திய அரசுக்கு எதிரான கோஷங்கள் எழுப்பப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சு-கி)

### 50 சைக்கிள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளன.

மீட்டெடுக்கப்பட்ட துவிச்சக்கரவண்டி உரிமையாளர்கள் தகுந்த ஆதாரங்களைக் காட்டி யாழ்ப்பாணத்திலுள்ள தமிழீழ காவல் துறையின் மக்கள் தொடர்புப் பணியகத்தில் பெற்றுக்கொள்ளமுடியும் என்று தமிழீழ காவல் துறை பொறுப்பாளர் திரு பா. நடேசன் தெரிவித்துள்ளார். (சு-கி)

### இந்தியா 1-114

(பம்பாய்)

இந்திய-இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான 3வது கிரிக்கெட் டெஸ்டின் 2-ம் நாள் முடிவில் இந்திய அணி முதல் இன்னிங்ஸில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 144 ஓட்டங்களைப் பெற்றது. இங். 347ஓட்டம்

### உள்ளூராட்சி சபை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முதலில் ஜனாதிபதி தேர்தலுக்குச் சென்று வெற்றி பெற்றால் இலங்கையடங்கிலுமுள்ள உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களில் எளிதாக வெற்றி பெறலாம் என்று சிறிசேன கூரே குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி தேர்தலில் தோல்வியடைந்தால் எல்லா உள்ளூராட்சி சபைகளிலும் தோல்வி ஏற்படும் என்றும் கூறமுடியாது.

கடந்த உள்ளூராட்சி தேர்தலில் மேல்மாகாணத்தில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு 8 லட்சத்து 50 ஆயிரத்து 959 வாக்குகள் கிடைத்தன. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு 8லட்சத்து 75 ஆயிரத்து 202 வாக்குகள் பெற்றுள்ளது. என்னதான் இருந்தாலும் அடுத்த உள்ளூராட்சித் தேர்தலில் ஐ. தே. க. வெற்றி பெறுவது அரிதே எனவும் அவர் கூறினார். (சு-கி)

## மரண அறிவித்தல்

### திருமதி பாக்கியம் இராமலிங்கம்

கோப்பாய் தெற்கு நாவலடியைச் சேர்ந்த திருமதி பாக்கியம் இராமலிங்கம் (முன்னைநாள் ஆசிரியை - கோப்பாய் நாவலர் வித்தியாலயம், கொழும்பு - அநுராதபுர விவேகானந்தா வித்தியாலயம்) காலமானார். அன்னார் யாழ். மேல்நீதிமன்ற முதலியாரும், முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற பதிவாளராகவும் கடமையாற்றி ஓய்வுபெற்ற வட-கைதடி சுப்பையா இராமலிங்கத்தின் அன்பு மனைவியும், திருமதி இராசம்மா காசிப்பிள்ளை, திருமதி தங்கம்மா இராசரத்தினம் ஆகியோரின் அன்புச்சகோதரியும், திருமதி சரஸ்வதி தேவி தியாகராஜா, நாகேந்திரன் (பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் - கொழும்பு), திருமதி சிவபாக்கியம் நடராசா ஆகியோரின் மைத்துனியும், திருமதி தயாளினி சத்தியசீலன், தயாமதி, பிரதீபன், நிதர்சன், பார்த்தீபன் ஆகியோரின் மாமியும், மிதிலா, சஜிதரனின் பெரியம்மாவும், டர்ஷனின் (10 F யாழ். இந்துக்கல்லூரி) வளர்ப்பு அன்னையும், பிரசாத், நிவர்திகாவின் அன்புப் பாட்டியுமாவார். ஈமக்கிரியைகள் அன்னாரின் கோப்பாய் இல்லத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

நாவலடி,
கோப்பாய் தெற்கு.
(சி 7254)

தகவல்:
க. இராமலிங்கம்
(கணவர்)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1993-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 21-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, SriLanka under Licence Number B/10336/B